பத்திரிக்கை செய்தி

அரசு நிதியை முறைகேடு செய்த வழக்கில் அப்போதைய அரசு அருங்காட்சியக கணக்காளர் மற்றும் பண சோதனை செய்யும் அதிகாரிகளுக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை

சென்னை எழும்பூரில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஜகருல்லா, கணக்காளர் மற்றும் கண்காணிப்பாளராகவும், ஜவகர், தேவதாஸ் மற்றும் ஜெயராஜ் ஆகியோர்கள் அருங்காட்சியகத்தில் பண சோதனை செய்யும் அதிகாரிகளாகவும் பணிபுரிந்து வந்துள்ளனர். கடந்த 11.11.2003 முதல் 30.06.2007 வரையிலான காலத்தில் ரூ.2,25,779/- முறைகேடு செய்தது சம்பந்தமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை சிறப்பு நீதிமன்றம், சென்னையில் நடைபெற்று வந்தது, திரு.தேவதாஸ், வழக்கு விசாரணையில் உள்ள போதே காலமாகிவிட்டார். இவ்வழக்கில் இன்று 11.06.2025 திரு.ஜகருல்லா, கணக்காளர், திரு.ஜவகர் மற்றும் திரு.ஜெயராஜ் ஆகியோருக்கு தலா 5 வருடங்கள் கடுங்காவல் தண்டனையும் மற்றும் தலா ரூ.1,50,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.